உ
சிவ சிவ
குற்றாலத் தெங்கூத்தா போற்றி

# அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயில்
# குற்றாலம்.

1426-ம் பயிராண்டு



திருக்குற்றாலம், சித்திர சபை

# திருவாதிரைத் திருவிழா அழைப்பிதழ்

**மார்கழி மாதம் 18-ம் தேதி முதல் மார்கழி மாதம் 27-ம் தேதி முடிய**

**(2-1-2017 முதல் 11-1-2017 முடிய)**



உ
சிவசிவ
குற்றாலத் தெங்கூத்தா போற்றி

# அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயில்,
# குற்றாலம்.

**திருக்குற்றாலப் பெருமை**

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டி யாழ்செய் குற்றாலம்
அம்பால் நொய்யோடு ஆடல் அமர்ந்தான் அவர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்.
(திருஞானசம்பந்தர்)

உற்றாராருளரோ - உயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றாராருளரோ.
(திருநாவுக்கரசர்)

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா உன் குறைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.
(மாணிக்கவாசகர்)

மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்
இலையார் குலமேந்திய கையா னெயிலெய்த
சிலையான் மேயநன்னகர் போலுஞ் சிறுத்தொண்டீர்
(தேவாரம்)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.
(குற்றாலக்குறவஞ்சி)

# திருவாதிரைத் திருவிழா அழைப்பிதழ்

புகழ்ந்தோதப்படும் பாண்டிய நாட்டுப்பழம்பதியாகிய திருக்குற்றாலத்தில் வீற்றிருக்கும் **அருள்மிகு திருக்குற்றாலநாதரும் - அருள்தரும் குழல்வாய்மொழியம்மையும்** இப்பூவுலக உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருவிழாக் கொண்டருள்வர். இத்தகைய **திருவிழாக்களில் முதன்மையானதும், அருள்மிகு நடராசர் திருத்தாண்டவம் ஆடிய ஐந்து சபைகளில் ஒன்றான சித்திரசபை அமையப்பெற்ற திருக்குற்றாலத்தில் அருள்மிகு நடராசப் பெருமானுக்கு நடைபெறும் சிறப்பு மிக்கதுமான மார்கழி திருவாதிரைத் திருவிழா** நாளது துர்முகி வருடம் **மார்கழி மாதம் 18-ம் தேதி (2-1-2017)** திங்கள் தொடங்கப்பெறுகிறது. அடியார்கள் அனைவரும் இத்திருவிழாக் காட்சிதனைக் கண்டு இறையருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இவண்,

**சி. லெட்சுமணன்,** எம்.எஸ்சி.,எம்.எல்.,எம்.பி.ஏ.,
இணை ஆணையர், திருநெல்வேலி.

**இரா. சாத்தையா,** பி.ஏ.,பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

**ச. கணேசன்,** பி.எஸ்சி.,பி.எல்.,
செயல் அலுவலர்.
மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

கொடி பட்டம் உபயதாரர் : திரு. **M.S.K.R. சுவாமிநாதன்,** தென்காசி.

| திரு நாள் | தமிழ் தேதி<br>ஆங்கில தேதி<br>கிழமை | நேரம் | வாகன வீதி உலா<br>சுவாமி | அம்பாள் | உபயதாரர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | மார்கழி 18<br>**2-1-17**<br>திங்கள் | அதிகாலை மணி<br>5-20-க்குமேல்<br>6-20-க்குள் | கொடியேற்றம்<br>அப்பர் திருவுலா<br>உழவாரப்பணி | | **திருக்கோவில்** |
| | | இரவு | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | |
| 2 | மார்கழி 19<br>**3-1-17**<br>செவ்வாய் | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | **திருக்கோவில்** |
| | | இரவு | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | |
| 3 | மார்கழி 20<br>**4-1-17**<br>புதன் | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | **திருக்கோவில்** |
| | | இரவு | பூதம் | சிம்மம் | |
| 4 | மார்கழி 21<br>**5-1-17**<br>வியாழன் | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | **அருள்மிகு<br>திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில்,<br>குற்றாலம்.** |
| | | இரவு | வெள்ளி ரிஷபம்<br>(பஞ்சமூர்த்திகள் புறப்பாடு) | வெள்ளி ரிஷபம் | |
| 5 | மார்கழி 22<br>**6-1-17**<br>வெள்ளி | காலை<br>8-50 மணி | அருள்மிகு நடராஜர் மற்றும் பஞ்சமூர்த்திகள் திருத்தேர் | | **சைவ வேளாளர் அபிவிருத்தி சங்கம்,**<br>குடியிருப்பு - குற்றாலம்.<br>**(மாலை பூஜை)** |
| | | இரவு | பூதம் | கிளி | |
| 6 | மார்கழி 23<br>**7-1-17**<br>சனி | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | **திருக்கோவில்** |
| | | இரவு | யானை | அன்னம் | |
| 7 | மார்கழி 24<br>**8-1-17**<br>ஞாயிறு | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | திரு. **சி. ஆறுமுக மூப்பனார் சன்ஸ்** அவர்கள்<br>முன்னாள் அறங்காவலர்,<br>உரிமையாளர், சிவ நாராயணா லாட்ஜ்,<br>குற்றாலம். |
| | | இரவு | அருள்மிகு நடராசர் வெள்ளை சாத்தி<br>வெள்ளிச்சப்பரம் | வெள்ளிச்சப்பரம் | |
| 8 | மார்கழி 25<br>**9-1-17**<br>திங்கள் | காலை | அருள்மிகு நடராசர் பச்சை சாத்தி<br>வெள்ளிச்சப்பரம் | வெள்ளிச்சப்பரம் | **சேனைத்தலைவர்<br>கல்வி அபிவிருத்தி சங்கம்**<br>திருநெல்வேலி டவுண்.<br>**(மாலை பூஜை)** |
| | | இரவு | பூங்கோயில் | பூங்கோயில் | |
| 9 | மார்கழி 26<br>**10-1-17**<br>செவ்வாய் | காலை | வெள்ளிச் சப்பரம் | வெள்ளிச் சப்பரம் | **திருக்குற்றாலநாதர் சுவாமி<br>திருக்கோயில் வாடகைதாரர்கள் &<br>குற்றாலம் வியாபாரிகள் சங்கம்<br>பதிவு எண் : 15 / 2003** |
| | | இரவு | பூதம் | காமதேனு | |
| 10 | மார்கழி 27<br>**11-1-17**<br>புதன் | அதிகாலை<br>4-00 மணி | **சித்திரசபையில் அருள்மிகு நடராசர்<br>ஆருத்ரா தரிசன தாண்டவ தீபாராதனை** | | **திருக்குற்றாலநாதர் சுவாமி<br>திருக்கோயில் வாடகைதாரர்கள் &<br>குற்றாலம் வியாபாரிகள் சங்கம்<br>பதிவு எண் : 15 / 2003** |
| | | அதிகாலை<br>5-00 மணி | **திரிகூட மண்டபத்தில் அருள்மிகு நடராசர்<br>ஆருத்ரா தரிசன தாண்டவ தீபாராதனை** | | |

## அன்னதான திட்ட நன்கொடை வேண்டுகோள்

தானங்களில் சிறந்தது அன்னதானமாகும். அன்னதானம் செய்வதால் மிக்க புண்ணியமுண்டு.
மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுள்ள
**அன்னதான திட்டம்** இத்திருக்கோவிலிலும் சிறப்புற நடைபெற்று வருகிறது.

**100** நபர்களுக்கு ஒரு நாளைக்கு அன்னதானம் செய்திட ரூ. **2000** செலவாகிறது. ரூ. **25,000** முதலீடு செய்தால் அதன் வட்டித் தொகையிலிருந்து தொடர்ந்து ஆண்டிற்கு ஒருநாள் அன்னதானம் செய்திட இயலும். இத்திட்டத்தில் பங்கேற்றுப் பயனடைய உபயதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

இத்திருக்கோயிலில் அர்ச்சனை கட்டணச்சீட்டு விற்பனைக் கூடத்தில் அன்னதான நன்கொடை சீட்டுகள் ரூ. **10,** ரூ. **20,** ரூ. **50** மற்றும் ரூ. **100,** ரூ. **200** என்ற விகிதத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் அன்னதான திட்டத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு **80(G)** பிரிவின்கீழ் வருமான வரிவிலக்கு பெறப்பட்டுள்ளது.







# திருவாதிரைத் திருவிழா - 2017

**சிறப்பு திருநாட்கள்**

| | | |
|---|---|---|
| 2-1-2017<br>திங்கள்கிழமை | அதிகாலை மணி<br>5-20-க்குமேல் 6-20-க்குள் | கொடியேற்றம் |
| 6-1-2017<br>வெள்ளிக்கிழமை | காலை மணி<br>8-50-க்குமேல் | திருத்தேர் வடம் பிடித்தல் |
| 9-1-2017<br>திங்கள்கிழமை | காலை மணி<br>10-00-க்கு | சித்திர சபையில் பச்சை சாத்தி<br>தாண்டவ தீபாராதனை |
| 11-1-2017<br>புதன்கிழமை | அதிகாலை மணி<br>4-00-க்கு | சித்திர சபையில் ஆருத்ரா தரிசன<br>தாண்டவ தீபாராதனை |
| | காலை மணி<br>5-00-க்கு | திரிகூட மண்டபத்தில் ஆருத்ரா தரிசன<br>தாண்டவ தீபாராதனை |

திருநாட்கள் முழுவதும் காலை 9-30 மணிக்கும், மாலை 7-00 மணிக்கும்
அருள்மிகு நடராசப் பெருமானுக்கு தாண்டவ தீபாராதனை நடைபெறும்.

இறை பணியில் :-

Vairamani. K.
93644 33311

Ph : 04633-222627
Cell : 90920 39666

hotel
AKSHYA
Boarding & Lodging

Arun ICECREAMS

Distributor :
SUPER Gas
WORLD'S No.1 LPG COMPANY

62, Old Bus Stand Road, Tenkasi - 627 811.

சுந்தரம் ஆப்செட், தென்காசி. ✆ : 223040